ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2017/2 - 2017 මැයි මස 02 වැනි අඟහරුවාදා - 2017.05.02

**2017/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*27(அ) ஆம் பிரிவில் உப பிரிவு (4) இன் கீழான கட்டளை*

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் பிரிவு 27அ (4) ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், காணி அமைச்சர் ஜோன் அன்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

*(அ) 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ள, இக்கட்டளையில் முதலாம் அட்டவணையில் விபரமாக காட்டப்படுகின்றதும், ஹெயார்பார்க் வத்தை என்று அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணியுடன் தொடர்புடைய 1982 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 195/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27அ(1) ஆம் பிரிவின் படி செய்யப்பட்ட கட்டளையில் இங்கு இரண்டாவது அட்டவணையில் குறித்துரைத்து காட்டப்பட்டுள்ள ஹெயார்பார்க் வத்தை (தெஹிகொல்ல பகுதி) என்ற காணியின் நிலப்பகுதிக்கு ஏற்புடையதாகும் பகுதி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிப்பதற்கு கவனத்திற் கொள்வதற்கான கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக செயற்படாமை என்ற அடிப்படையில், இரத்துச் செய்வதன் மூலம் அந்தக் கட்டளையை திருத்தம் செய்கின்றேன்; மற்றும்*

*(ஆ) இந்த இரத்துச் செய்தலுக்கமைவாக இக்கட்டளையில் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைத்து காட்டப்பட்டுள்ள காணி அளவினை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையளிக்கப்படுவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஜோன் அன்தனீ எம்மானுவெல் அமரதுங்க,*
*காணி அமைச்சர்.*

*காணி அமைச்சு,*
*காணிச் செயலகம்,*
*மிஹிகத்த மெதுர,*
*இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை.*
*2017.04.05*


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## முதலாவது அட்டவணை

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ள ஹெயார்பார்க் வத்தை என்ற காணியின் விபரம்

| அதிவிசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் | தோட்டக் காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்டயார்) |
|---|---|---|---|---|
| 1982.05.31 ஆந் திகதிய 195/6 ஆம் இலக்க | ஹெயார்பார்க் வத்தை | கண்டி | உடுதும்பரை | 175.27 |

## இரண்டாவது அட்டவணை

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையேற்கப்படும் காணிப் பகுதியின் விபரம்

| விசேட இலக்கம் | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் காணிகளின் அளவு |
|---|---|---|---|---|---|
| மஹ/5 | ஹெயார்பார்க் வத்தை (தெஹி கொல்ல பகுதி) | கண்டி | உடுதும்பரை | கெரந்டிகல (879) | மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் கன்தெக்க கோறளையில் உடுதும்பரை பிரதேச செயலகப் பிரிவில் தெஹி கொல்லதென்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திருமதி எஸ். குமாரி விஜேகோன் அவர்களால் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்டுள்ள 2016/ 20 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 01 இன் கீழ் காட்டப்பட்டுள்ள 02 ஏக்கர் 0 றூட் 00 பேர்ச்சஸ் (0.8094 ஹெக்டேயர்) அளவு கொண்டதும், வடக்கு: ஹெயார்பார்க் வத்தை (இந்தக் காணியின் மிகுதிப் பகுதி) கிழக்கு: ஹெயார் பார்க் வத்தை (இந்தக் காணியின் மிகுதிப் பகுதி) தெற்கு: ஹெயார் பார்க் வத்தை (இந்தக் காணியின் மிகுதிப் பகுதி) மற்றும் வீதி மேற்கு: வீதி மற்றும் ஹெயார் பார்க் வத்தை (இந்தக் காணியின் மிகுதிப்பகுதி) ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள ஹெயார் பார்க் வத்தை (தெஹிகொல்ல பகுதி) எனும் காணிப் பகுதியாகும். |

5 - 422

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.